டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 17.8.2023 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 51 - Madurai | Online Edition

# தமிழ்நாட்டில் அடுத்த ஏழு நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, ஆக.16

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக. இன்று தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

18 முதல் 22ம் தேதி வரையிலான நாட்களில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைப் பொறுத்தமட்டில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்ப நிலை 36-37 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்ப நிலை 25-26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில், இன்று தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# யூரியா வழங்க ரூ.10 லட்சம் கோடி மானியம்

## சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி தகவல்

புது தில்லி, ஆக.16

ரூ.3,000 மதிப்புள்ள யூரியா மூட்டை ரூ.300க்கு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது

பிரதமர் நரேந்திர மோடி செங்கோட்டையில் தமது சுதந்திர தின உரையில், விவசாயிகளுக்கு யூரியா மானியமாக ரூ.10 லட்சம் கோடியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது என்று கூறினார். 'உலகளவில் ஒரு மூட்டைக்கு ரூ.3,000 மதிப்புள்ள யூரியாவை விவசாயிகளுக்கு ஒரு மூட்டைக்கு ரூ.300 என்ற மலிவான விலையில் வழங்க, அரசாங்கம் யூரியா மானியமாக ரூ.10 லட்சம் கோடியை ஒதுக்கியது" என்றார் அவர்.






சில உலகளாவிய சந்தைகளில் ரூ.3,000க்கு விற்கப்படும் யூரியா மூட்டைகள் விவசாயிகளுக்கு ரூ.300க்கு மிகாமல் வழங்கப்படுவதாக செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களுக்கு பிரதமர் தெரிவித்தார். சில உலக சந்தைகளில் ரூ.3,000-க்கு விற்கப்படும் யூரியா மூட்டைகள், இப்போது நமது விவசாயிகளுக்கு ரூ.300-க்கு அரசு வழங்குகிறது, எனவே நமது விவசாயிகளுக்கு யூரியாவுக்கு ரூ.10 லட்சம் கோடி மானியம் வழங்கப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சம்பா மற்றும் தாளடி பருவ விதைப்புக்கு முன் விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

திருவாரூர், ஆக.16

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் ஆயுத்தமாகி வருகிறார்கள்.

நடப்பாண்டில் 3 லட்சத்து 65 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தின் அடித்தளமே நல்ல விதைகள் தான். பலவிதமான நவீன முறைகள் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டாலும் நல்ல தரமான முளைப்புத்திறன் கொண்ட விதைகள் தான் பயிரின் விளைச்சலைப் பெரிதும் நிர்ணயிக்கின்றன.

சாகுபடிக்கு தேவையான நீண்டகால விதை நெல் இரகங்களான சி.ஆர்.1009 சப்-1, சாவித்திரி (சி.ஆர்.1009) ஏடீடி - 38, ஏடீடி - 39, ஏடீடி - 46, ஏடீடி-50, ஏடீடி-51, ஏடீடி-54, சொர்ணா சப்-1, கோ.ஆர்-49, மற்றும் மத்திய கால இரகங்களான கோ.ஆர்-50, டி.கே.எம்.13, எம்.டி.யூ-7029, நெல்லூர் மகசூரி (NLR 34449) திருச்சி-3, கோ-43, சம்பா மகசூரி (பிபிடி 5204), வெள்ளை பொன்னி, போன்ற விதைகள் தேவையான அளவு வேளாண் விரிவாக்க மையங்களிலும், வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலும் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் சான்று பெறாத தங்கள் சொந்த விதைகளையும் பயன்படுத்தலாம். எனினும் அந்த விதைகள் தரத்துடனும் நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளா என்பதை திருவாரூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து பின்பு விதைப்புக்கு பயன்படுத்தினால் நல்ல வாளிப்பான பயிர்களைப் பெற்று உயர் மகசூல் பெறலாம்.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள நெல் விதைகளின் தரத்தை அறிய 100 கிராம் விதை மாதிரியும் மற்றும் மாதிரிக்கு ரூ.80/- கட்டணத்தை நேரிலோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர்,

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

விதைப்பரிசோதனை நிலையம், 15-பி, பெரியமில்தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

பின்வரும் விவரங்களான விதை மாதிரி அனுப்பும் விவசாயியின் பெயர், தந்தை பெயர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் பயிரின் வகை, இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவற்றுடன் பின்வரும் அளவில் விதைகளை துணிப்பையில் வைத்து அனுப்பவேண்டும்.

இச்செய்தியினை இரா.குப்புசாமி, தஞ்சை சரக விதை பரிசோதனை அலுவலர் மற்றும் மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி, வேளாண்மை அலுவலர் சிவசக்தி விதைப் பரிசோதனை நிலையம், திருவாரூர் ஆகியோர் தெரிவித்து உள்ளார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# நீலகிரி மாவட்டத்தில் காய்கறி விதைகளின் தரம் அறிய விதைப்பரிசோதனை அவசியம்

## கோவை, விதைப்பரிசோதனை அலுவலர் அறிவுறுத்தல்

ஊட்டி, ஆக.16

நீலகிரி மாவட்ட விவசாயிகள் தாங்கள் பயிரிட பயன்படுத்தும் காய்கறி விதைகளை உதகை, ரோஸ் கார்டன், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் பணி விதை மாதிரியை கொடுத்து விதைப்பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத் திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன.

ஒரு பணிவிதை மாதிரிக்கு ரூ.80/- பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்தவிபரச் சீட்டுகளுடன் கொடுத்து விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

விதைப்பரிசோதனைக்கு சமர்ப்பிக்க வேண்டிய பிரதான காய்கறிகளுக்கான பணிவிதை மாதிரியின் குறைந்தபட்ச அளவு பின்வருமாறு :

கேரட் 10 கிராம், பீட்ரூட் 50 கிராம், முட்டைகோஸ் 10 கிராம், காலிபிளவர் 10 கிராம், ப்ரொகோளி 10 கிராம், முள்ளங்கி 50 கிராம், டர்னிப் 10 கிராம், பீன்ஸ் 450 கிராம், பட்டாணி 250 கிராம், பாலக்கீரை 250 கிராம், குடைமிளகாய் 10 கிராம் ஆகும்.

இவ்வாறு பயிருக்கேற்ப குறைந்தபட்ச பணிவிதை மாதிரியை உதகை, விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து விதைப்பரிசோதனை செய்து கொள்ளலாம் என கோவை, விதைப்பரிசோதனை அலுவலர் அறிவுறுத்தியுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## 77வது சுதந்திர தின விழா



கோவை, ஆக.16

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 77வது சுதந்திர தின விழா 15.8.23 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலெட்சுமி, தேசியக்கொடி ஏற்றி மரியாதை செய்து சுதந்திர தின விழா உரையாற்றினார்.

தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களின் பணிகளை துணைவேந்தர் ஆய்வு செய்தார். துணைவேந்தர் தனது 77வது சுதந்திர தின சிறப்புரையில் புது வாழ்விற்காக உயிர் தியாகம் செய்த தியாகிகளின் நித்திய நினைவுகளை நினைவு கூர்ந்தார். வேளாண் சமூகத்தின் நலனுக்காக இந்த ஆண்டு வெளிவந்த அறிவியல் வெளியீடுகள், 23 புதிய பயிர் வகைகள் மற்றும் 10 பண்ணை தொழில்நுட்பங்களை வெளியிட்டு விவசாய நிறுவனங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 5வது இடத்தையும், மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் 2வது இடத்தையும் பிடித்ததற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் முயற்சிகளை பாராட்டினார்.

பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறைகளில் நிபுணத்துவம், ஆராய்ச்சி குறிப்பாக உயிரி தொழில் நுட்பம், நானோ தொழில்நுட்பம், தொலை உணர்வு, உணவு தொழில் நுட்பம், துல்லிய விவசாயம் அதிக அடர்த்தி நடவு முறைகள் போன்றவை நமது விவசாய பெருமக்களுக்கு அதிக வருமானம் ஈட்டுவதற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்றும் இந்திய பொருளாதாரம் முதன்மை நிலையை அடைய

முன் முயற்சிகளை எடுப்பதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார். பொறி பருத்தி தண்டு அந்துப் பூச்சி, முதல் மரபணு மாற்றம் அல்லாத களைக்கொல்லியை தாங்கும் அரிசி, இந்தியாவின் முதல் நீரழிவு எதிர்ப்பு அரிசி, ட்ரோன் பயன்பாடுகளுக்கான எஸ்.ஒ.பி. அதிக வருமானத்தை ஈட்டுகின்றன. மேலும் 'தற்சார்பு இந்தியா' பற்றியும் தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு குறித்தும் எடுத்துரைத்தார். இந்தியா விவசாயம் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியைக் காண அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

இவ்விழாவின் நிறைவாக தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வருடாந்திர பயிற்சி முகாமில் வெற்றி பெற்றதற்கான பரிசுகள், மகாகவி பாரதியார் மற்றும் தேசிய விடுதலை போராட்ட இயக்கத்தை தலைப்பாகக் கொண்டு நடத்தப்பட்ட 77வது சுதந்திர தின விழாவிற்கான போட்டிகளில் வென்ற பள்ளி மாணவர்கள், தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களுக்கு துணைவேந்தர் பரிசுகளை வழங்கினார்.

இந்த விழாவில் பல்கலைக்கழக அதிகாரிகள், துறைத் தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## சுதந்திர தினத்தன்று அண்ணாமலை பல்கலை. தோட்டக்கலை மாணவிகளின் ஊரக தோட்டக்கலை பணி அனுபவம்

கடலூர், ஆக.16

கடலூர் மாவட்டம், சாக்காங்குடி கிராமத்தில், அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயிலும் தோட்டக்கலை மாணவிகள் அப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். அத்துடன் 'காலநிலை மாற்றம்' குறித்து விழிப்புணர்வு பேரணி நடத்தினர்.

மேலும் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுடன் சேர்ந்து மரக்கன்றுகளை நட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# மேல்மங்கலம் ஊராட்சியில் சுதந்திர தினத்தன்று நடைபெற்ற கிராம சபை

## காந்தி கிராம பல்கலைக்கழக வேளாண் அறிவியல் மாணவர்கள் பங்கேற்பு



தேனி, ஆக.16

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் ஊராட்சியில் சுதந்திர தினத்தன்று நடைபெற்ற கிராம சபை, பொதுக்கூட்டத்தில் கிராம முன்னேற்றத்திற்கான திட்டங்களின் கணக்கு வழக்குகள் பரிமாற்றப்பட்டன. மேலும் தோட்டக்கலை மற்றும் சுகாதாரத் துறை சார்பில் புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன. கிராம மக்களால் சாலை சரிபார்ப்பு, குடிநீர் இணைப்பு போன்ற கோரிக்கைகள் ஊராட்சி தலைவர் இடம் முன்வைக்கப் பட்டது. இதில் RAWE பயிற்சியில் உள்ள காந்தி கிராம பல்கலைக் கழக இளநிலை வேளாண் அறிவியல் ஐந்து மாணவர்கள் ஞானசேகரன். நா, கபிலன்.செ.ப, அருள் காமாட்சி.சு, அஜய் குமார்.த, சங்கர கிருஷ்ணன்.மு. ஆகியோர் பங்கேற்று கூட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை அறிந்து கொண்டனர்.





HEALTHY CROPS
HAPPY FARMER
SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM
GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# தினம் ஒரு மூலிகை

## கிராம்பு




கிராம்பு மசாலா பொருட்களில் இதற்கென தனி இடம் உண்டு. உணவுகளிலும், பானங்களிலும் சுவை கூட்ட, மனம் கூட்ட சிறந்த உணவுப் பொருள் அதிகமான பயன்பாடுகள் சில பக்க விளைவுகளை உண்டாக்கும். கிராம்பு என்பதை அறிந்து பயன்படுத்துவதே அவசியம் ஆகும். கிராம்பு நறுமணமிக்க பயிர், அரோமோதெரபி பல் மருத்துவத்திற்கான எண்ணெய் வடிவில் இது பயன்படுகிறது. வயிற்றுப்போக்கு, முகப்பரு, செரிமான பிரச்சனைகள், சளி மற்றும் இருமல் பிரச்சனைகளுக்கு கிராம்பு பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கிராம்பு பொடியை அரை கிராம் தேனில் குழைத்து காலை, மாலை சாப்பிட அக உறுப்புகள் அனைத்தும் பலப்படும். இரண்டு கிராம் கிராம்பு பொடியை சமன் பனைவெல்லத்தில் கலந்து மாதவிடாய் காலத்தில் மூன்று நாட்களும் காலை, மாலை கொடுத்து வர உதிர சிக்கலும் அதனால் ஏற்படும் அடிவயிற்று வலியும் தீரும். கிராம்பு பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல் வலி ஆகியவை குணமாகும்.

தகவல் : ASN சாமி, அங்கக ஒருங்கிணைந்த விவசாய பண்ணை மற்றும் மூலிகை பண்ணை, ஆதனூர். திருவண்ணாமலை மாவட்டம். 94423 11505.

பயோ கம்போஸ்டர்
மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவை
AGRIYA
BIO COMPOSTER
உபயோகியுங்கள்
Customer Care: 0452 - 2321722
பயோ கம்போஸ்டர் பண்ணைக் கழிவுகளையும், நகர குப்பைக் கழிவுகளையும் முழுமையாக மக்க வைக்கும் நுண்ணுயிர் கலவையாகும்.
INDOCERT
LINGA CHEMICALS

# எண்ணெய் பனைக்கு ஏன் முக்கியத்தும் தெரியுமா?

77வது சுதந்திர தின விழாவில் நமது பிரதமர் பேசுகையில், இந்த சுதந்திர தின நன்னாளில் இறக்குமதியிலிருந்து சுதந்திரம் பெற உறுதிமொழி எடுப்போம் என்றார். இந்தியா, வெளிநாடு களில் இருந்து 50% எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. என்ன வளம் இல்லை இந்தியா திருநாட்டில் என்ற பாடலுக்கேற்ப நாம் எல்லா வகையான வளங்கள் இருந்தாலும்கூட அதை முறையாக பயன்படுத்தாத நிலை தான். அந்த வகையில் நாம் எண்ணெய் பனை (OIL PALM) அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**எண்ணெய் பனையின் இலக்கு**

எண்ணெய் பனை உற்பத்தி பரப்பு 10 லட்சம் ஹெக்டேராக உயர்த்தவும், 25-26 ஆம் ஆண்டில் கச்சா பாமாயில் உற்பத்தியை 11 லட்சத்து 20 ஆயிரம் டன்னாக உயர்த்திட மத்திய அரசு 2021 ஆம் ஆண்டிலே இலக்கு நிர்ணயித்து தேசிய சமையல் எண் ணெய் இயக்கத்தை தொடங்கியது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

**எண்ணெயின் தேவை எவ்வளவு தெரியுமா?**

நாட்டின் பாமாயில் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது. கடந்த மே மாதத்தில் மட்டும் 4 லட்சத்து 41 ஆயிரம் டன் இறக்குமதி செய்யப்பட்டது. இதில் இருந்து நாம் தெளிவாக தெரிவது எந்த அளவுக்கு அன்னிய செலாவணி அதிகமாக செலவாகிறது என்று.

**எந்த எந்த நாடுகளில் நாம் இறக்குமதி செய்கிறோம் தெரியுமா?**

நமது பாமாயில் தேவையை பூர்த்தி செய்ய இந்தோனேயா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள்.

**எண்ணெய் பனை அதிகப்படுத்திட எடுக்கப்படும் நடவடிக்கைகள்?**

பாமாயில் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற முனைப்பில், தேசிய சமையல் எண்ணெய் இயக்கத்தின் கீழ் எண்ணெய் பனை சாகுபடியை அதிகரிக்க மாநில அரசுகள் மற்றும் எண்ணெய் பதப்படுத்தும் நிறுவனங்கள் இணைந்து ஜூலை மாதம் 25ந் தேதி முதல் எண்ணெய் பனங்கன்று நடவு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

பதஞ்சலி புட் பிரைவேட் லிமிடெட், கோத்ரெஜ் அக்ரோவெட் மற்றும் 3 எப் போன்ற மூன்று பெரிய எண்ணெய் பதப்படுத்தும் நிறுவனங்கள் இந்த எண்ணெய் பனை இயக்கத்தை முன்னெடுப்புடன் செயல்படுத்த தொடங்கி விட்டது.

**எண்ணெய் பனை சாகுபடிக்கான மாநிலங்கள் எவை**

ஆந்திரா, தெலுங்கானா, ஓடிசா, திரிபுரா, கோவா, அசாம், மிசோரம், அருணாசல பிரதேசம், கர்நாடகா மற்றும் தமிழகம் (திருச்சி உள்ளிட்ட டெல்டா பகுதிகள்) எண்ணெய் பனை சாகுபடிக்கு தமிழகத்தில் தோட்டக் கலைதுறை மூலமாக மானியத்தில் நாற்று உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் இதனை கொள்முதல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை கோத்ரெஜ் அக்ரோ வெட் நிறுவனம் வழங்கி வருகிறது.




**பாமாயில் மாற்று ஏற்பாடு உண்டா?**

சமையல் எண்ணெய்யில் பாமாயிலுக்கு மாற்றாக சூரிய காந்தி எண்ணெய், தவிட்டு எண்ணெய் போன்ற எண்ணெய்கள் பயன் பாட்டில் இருந்தாலும் கூட இவையும் இறக்குமதி தான் செய்யப் படுகிறது. தடையின்றி கிடைத்த சன்பிளவர் ஆயில் கூட தற்போது நடைபெறும் ரஷ்யா–உக்ரைன் போரில் தடைபெற்று சரிவர கிடைப்பதில்லை. எனவே சமையல் எண்ணெய் உற்பத்தி அதிகரிக்க நிலக்கடலை, எள், தென்னை போன்ற எண்ணெய் வித்து பயிர்களை எங்கெங்கு வாய்ப்புள்ளதா அந்தந்த பகுதியில் சாகுபடி செய்து இறக்குமதியிலிருந்து முழுமையாக சுதந்திர பெறுவோம். இந்த 77வது சுதந்திர தின விழாவில் உறுதி எடுப்போம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# தென்னையில் பூச்சி மற்றும் நோய் கட்டுபாடு குறித்து காந்திகிராம பல்கலை. வேளாண் மாணவர் விளக்கம்



திண்டுக்கல், ஆக.16

ஸ்ரீ சக்தி சமூக பொருளாதார மற்றும் கல்வி நல அறக்கட்டளை திண்டுக்கல், அய்யம் பாளையத்தில் உள்ள அரசு சாரா நிறுவனம். இந்த அமைப்பு கிராமப் புற மக்களின் வளர்ச்சிக்காக பல நலத்திட்டங்களை நடத்தி வருகிறது. அவர்கள் அய்யம் பாளையத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தையும் நடத்தி வருகின்றனர்.

சமீபத்தில் தேனி மற்றும் மதுரை மாவட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவுடன் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சுந்தரபாண்டியன் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மதுரை மாவட்டச் செயல் அலுவலர் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த சுதாதேவி வாழ்ந்து காட்டு வோம் திட்டத்தின் திண்டுக்கல் மாவட்டச் செயலர் பங்கேற்று அய்யம்பாளையம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் தென்னை மரத்திலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் எவ்வாறு தயாரிப்பது மற்றும் சந்தைப்படுத்துவது என்பது குறித்து கற்று அறிந்தனர்.

இவர்களுடன் திண்டுக்கல் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தின் இளங்கலை வேளாண்மை பட்டப்படிப்பு பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் சந்துரு.பி.ர, செ.ஷியாம் சுந்தர், ஜெ.சரவண கிருஷ்ணன், கா.கோபாலகிருஷ்ணன், க.கார்த்திக் ராஜா ஆகியோர் பங்கேற்று தென்னையில் காண்டா மிருக வண்டு, சிவப்புக் கூன்வண்டு பூச்சி கட்டுபடுத்தும் முறை மற்றும் நோய் மேலாண்மை குறித்தும் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.

மேலும் உயிர் உரம் பயன்படுத்தும் செயல்முறை விளக்கம் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்தும் அதற்கு அரசு வழங்கும் மானிய விலை திட்டங்களையும் விளக்கினர்.

# கிராம சபை கூட்டத்தில் காந்தி கிராம பல்கலை. வேளாண் மாணவர்கள் பங்கேற்பு

தேனி, ஆக.16

தேனி மாவட்டம், தேவரப்பன்பட்டியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில், கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இளங்கலை வேளாண்மை பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் மாணவர்கள் தங்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் உள்ள கிராமதங்கள் திட்டத்தில் கா.கோபாலகிருஷ்ணன், ஜெ.சரவண கிருஷ்ணன், பி.ர.சந்துரு, க.கார்த்திக் ராஜா, கெ.ஷியாம் சுந்தர் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். கூட்டத்தில் ஊராட்சியின் வரவு - செலவு கணக்குகள் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அப்பகுதி மக்கள் தெரிவித்த குறைகளை தீர்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தின் நிறைவாக ஊராட்சி தலைவருடன் இணைந்து கல்லூரி மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டனர்.



# உயர் விளைச்சல் இரக சோளம் கோ - 32 அறிமுகம்

கோவை, ஆக.16

கோவை மாவட்டத்தில் சோளம் பயிரிடும் விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டியவை சோளத்தில் தானியம் மற்றும் தீவனம் ஆகிய இரு பயன்களை அளிக்கக்கூடிய இரகமாக CO 32 (TNS 648 Culture) அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.



இந்த இரகம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் 2020ல் வெளியிடப்பட்டு தற்சமயம் நல்ல மகசூல் தரக்கூடிய இரகமாக உள்ளது. இறவையில் ஏக்கருக்கு சுமார் 1200 கிலோவும், மானாவாரியில் சுமார் 980 கிலோ மகசூல் தர வல்லது. இது K2 என்ற சோள உயர்விளைச்சல் இரகத்தைக் காட்டிலும் 13% அதிக தானிய மற்றும் தீவன மகசூலை தரக் கூடிய இரகமாகும். இதன் பயிர்க்காலம் 105-110 நாட்களாகும். மேலும் தானியங்கள் மஞ்சள் கலந்த வெண்மை நிறத்துடன் திரட்சியுடன் காணப்படும் தண்டு துளைப்பான் மற்றும் கரிபூட்டை நோய்க்கு மிதமான எதிர்ப்பு சக்தி உடையது.

இதன் மணிகளில் 11.31-14.66% புரதசத்து உள்ளதால், தானியமாக பயன்படுத்த சிறந்த பலன்களை அளிக்கும். எனவே, விவசாயிகள் இந்த இரகத்தினை பயிரிட்டு பயன் பெறலாம். இன்னும் இரண்டு மாதங்களில் விதைச் சான்றளிப்புத் துறை மூலம் கண்காணிக்கப்பட்டு, அந்தந்த பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களில் தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்க இருப்பதால், விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கோவை, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் நர்கீஸ் மற்றும் விதைச்சான்று அலுவலர் ஹேமலதா தெரிவித்துள்ளனர்.

# பருவநிலை நெருக்கடியில் உலகம் சிக்கியுள்ளது

## சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முன்முயற்சியை நாம் காட்டியுள்ளோம்

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

புது தில்லி, ஆக.16

77-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுதில்லியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டையில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ஜி 20 உச்சி




மாநாட்டிற்காக 'ஒரே உலகம், ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கருத்தை நாம் முன்வைத்துள்ளோம், அந்த திசையில் செயல்பட்டு வருகிறோம் என்றார். உலகம் காலநிலை நெருக்கடி களில் சிக்கி திணறி வரும் நிலையில், நாம் சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறையை லைப் இயக்கம் மூலம் வழி காட்டி உளோம் என்று அவர் கூறினார்.

உலக நாடுகளுடன் இணைந்து சர்வதேச சூரியசக்தி கூட்டணியை உருவாக்கியுள்ளோம் என்றும், பல நாடுகள் இப்போது சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் ஒரு பகுதியாக உள்ளன என்றும் பிரதமர் கூறினார். பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்தியுள்ளோம் மற்றும் 'பெரிய பூனை கூட்டணி' நிறுவலை முன்னெடுத்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இளையோர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் சுதந்திர தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம்

கடலூர், ஆக.16

அண்ணாமலைப் பல்கலைக்கழக இளையோர் செஞ்சிலுவை சங்கம் சார்பில் 77-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 14.8.23 அன்று காலை 10 மணியளவில் கடலூர் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இரத்த தான முகாம் நடைபெற்றது.




அண்ணாமலைப் பல்கலைக் கழக இளையோர் செஞ்சிலுவை சங்க மண்டல ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி.ராஜ் பிரவின் மற்றும் இளையோர் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர்கள் முனைவர் நீலகண்டன் மற்றும் முனைவர் SS. சிதம்பரராஜா ஆகிய அமைப்பு செயலாளர்கள் இம்முகாமிற்கான ஏற்பாடு களை செய்தனர்.

இந்த முகாமில் அண்ணாமலைப் பல்கலைக்கழக உளவியல் துறை தலைவர், முனைவர் K.கோவிந், அரசு கடலூர் மருத்துவ மனை தலைமை கண்காணிப்பாளர் Dr. ஜுனியர் சுந்தரேசன், மருத்துவமனை நிலைய மருத்துவர் Dr.பாரி, குருதி வங்கி மருத்துவர் Dr.வள்ளுவன், சமூக ஆர்வலர் S.ராமச்சந்திரன், ரத்த வங்கி தலைமை தொழில்நுட்ப பணியாளர் செந்தில்குமார் மற்றும் குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் அண்ணாமலைப் பல்கலைக் கழக உளவியல் மற்றும் விளையாட்டு துறை மாணவர்கள் கலந்து கொண்டு 27 அலகு ரத்த தானம் வழங்கினர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# விளைநிலங்களில் மயில் வராமல் தடுக்கும் முறை

நல்ல வாசம் வரும் கருவாட்டை சுமார் கால் கிலோ எடுத்து மிக்ஸியில் நன்றாக பொடியாக அரைத்து கொள்ளுங்க. கோழி முட்டை மூன்று அல்லது நான்கு எண்ணிக்கைகளில் உடைத்து கருவாட்டு பொடியுடன் கலந்து விட்டு காற்று புகா டப்பாவில் நான்கைந்து நாட்கள் அப்படியே வைத்திருங்க.

பின்பு இந்த கலவையை மணலில் கலந்து மயில்கள் எங்கு நடமாட்டம் உள்ளதோ அங்கே தூவி விடுங்க (கலவை நாற்றம் மிக அதிகமாக இருக்கும்). இந்த வாசத்திற்கு மயில் எட்டிப் பார்க்காது. ஒரு ஐந்து-ஏழு நாட்கள் இடைவெளியில் இதே முறையை பின்பற்றி தொடர்ச்சியா செய்திட்டு வந்தா மயில்களிடம் இருந்து பயிரை காப்பாற்றிக் கொள்ளலாம்.

கருவாட்டை தூளாக அரைப்பதற்கு காரணம் நாய்களோ எலிகளோ தூக்கிக் கொண்டு ஓடிவிடும் அதனால் பொடி செய்து பயன்படுத்துவது நல்ல பலன் தரும்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி, உழவர் சந்தை 16-8-23 காய்கறிகள் விலை விபரம்

(ரூ/கிலோ)

| | |
|---|---|
| 1. தக்காளி | ரூ.50-60 |
| 2. உருளை | ரூ.36-58 |
| 3. சின்ன வெங்காயம் | ரூ.50-52 |
| 4. பெரிய வெங்காயம் | ரூ.36-38 |
| 5. பச்சை மிளகாய் | ரூ.40-45 |
| 6. கத்தரி | ரூ.20-25 |
| 7. வெண்டைக்காய் | ரூ.12-14 |
| 8. முருங்கை காய் | ரூ.20-40 |
| 9. பீர்க்கங்காய் | ரூ.30-35 |
| 10. சுரக்காய் | ரூ.20-25 |
| 11. புடலங்காய் | ரூ.20-22 |




| | |
|---|---|
| 12. பாகற்காய் | ரூ.40-45 |
| 13. தேங்காய் | ரூ.25-28 |
| 14. முள்ளங்கி | ரூ.12-14 |
| 15. பீன்ஸ் | ரூ.58-60 |
| 16. அவரை | ரூ.35-40 |
| 17. கேரட் | ரூ.60-65 |
| 18. வெற்றிலை | இல்லை |
| 19. மாங்காய் | ரூ.30-40 |
| 20. வாழைப்பழம் | ரூ. 30-40-55 |
| 21. கீரைகள் | ரூ.20-24 |
| 22. பப்பாளி | ரூ.20-24 |
| 23. கொய்யா | ரூ.30-40 |
| 24. மாம்பழம் | ரூ.40-50 |
| 25. ஆப்பிள் | ரூ.200 |
| 26. சாத்துக்குடி | ரூ.70 |

தகவல் : நிர்வாக அலுவலர், உழவர் சந்தை, அஸ்தம்பட்டி, சேலம் மாவட்டம்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

இராமநாதபுரம், ஆக.16

என்மனம்கொண்டான் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவில் உள்ள விவசாயிகளுக்கு பயிற்சியானது, இராம நாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரம், என்மனம்கொண்டான் பஞ்சாயத்தில் 15.8.23 அன்று வேளாண்மை துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவில் உள்ள விவசாயி களுக்கு மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயிற்சி






நடைபெற்றது. எம்.கே.அமர்லால், வேளாண்மை உதவி இயக்குநர், திருப்புல்லாணி, கிராம வேளாண் முன்னேற்றக் குழு விவசாயிகளின் செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் பற்றி எடுத்துரைத்தார். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் மானிய பொருட்கள் மற்றும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

விவசாயிகளிடையே நெல் சாகுபடியில் கோடை உழவு, விதைத்தேர்வு, விதைகளை நேர்த்தி செய்யும் முறைகளான உயிர் உர விதை நேர்த்தி முறைக்கு ஒரு ஏக்கருக்கு தேவை யான விதையுடன் 200 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் 200 கிராம் பாஸ்போபேக்டீரியாவை கலந்து விதைப்பு செய்யலாம் என்றும் விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான நோய்களை தடுப்பதற்கு ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் அல்லது 4 கிராம்

டி.விரிடி கலந்து 24 மணி நேரத்திற்குள் விதைப்பு செய்யலாம் என்றும் கூறினார்.

மேலும் பயிர் வறட்சியினை தாங்கி வளர நெல்லுக்கு விதை கடினப்படுத்துதல் செய்தல் அவசியம் என்றும் அதற்கு ஏக் கருக்கு தேவையான நெல் விதையுடன் 300 கிராம் பொட்டாஸ் மற்றும் 30 லிட்டர் தண்ணீரில் கலந்து 14 -16 மணி நேரம் ஊற வைத்து பின்பு நிழலில் உலர்த்தி பழைய ஈரப்பதத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று கூறினார். நெல்லில் நேரடி வரிசை விதைப்பு முறை பற்றியும் கூறினார். மேலும் நடப்பு ஆண்டு 2023 சிறுதானியங்கள் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது என விவசாயிகளிடம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து சிறுதானி யங்களை நெல்லுக்கு பதிலாக மாற்றுப் பயிராக சாகுபடி செய்து விவசாயிகள் இரட்டிப்பு வருமானம் ஈட்டிடலாம் என கூறினார்.

கே.கலைவாணி, வேளாண்மை அலுவலர், உச்சிப்புளி 1% KCL விதை நேர்த்தி தொடர்பான செயல் விளக்கம் அளித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் யோகலெட்சுமி, சண்முகநாதன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பவித்ரன் செய்திருந்தனர். பயிற்சி முடிவில் விவசாயி களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.



# பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி - E KYC செய்ய அழைப்பு

பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி எனப்படும் பிரதமரின் விவசாய நிதித் திட்டத்தீன் கீழ் நலிந்த விவசாயிகளுக்கு ஆண்டு தோறும் 3 தவணைகளாக ரூ.6,000 நிதியுதவி செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி, 2018ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் இந்தத் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. 2019-20 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் விவசாயி களுக்கு ஆண்டுக்கு மூன்று முறை ரூ.2,000 என ஆண்டுக்கு ரூ.6,000 நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**தகுதியுடையவர்கள் – தகுதியற்றவர்கள் யார் யார்?**

பயிரிடக்கூடிய நிலங்களைத் தங்களது பெயரில் வைத் திருக்கும் விவசாயிகளின் குடும்பங்கள் பிரதமர் கிசான் நிதியுதவி பெற விண்ணப்பிக்கலாம். கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதி களைச் சேர்ந்த விவசாயிகள் இந்த திட்டத்திற்கு விண்ணப் பிக்கலாம். அதேநேரம், நிறுவன விவசாயிகள், மாநில மற்றும் மத்திய அரசு ஊழியர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் ஊழியர்கள், வருமான வரி செலுத்துபவர்கள், அரசியலமைப்பு பதவிகளை வகிக்கும் உழவர் குடும்பங்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொறியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள் மாதத்திற்கு 10,000 ரூபாய்க்கும் அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் போன்றோர் இந்த நிதியுதவிக்கு விண்ணப்பிக்க தகுதி இல்லை.

பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி - E KYC, PM KISAN திட்டத்தின் கீழ் பயன் பெறும் விவசாயிகள் தங்களுக்கு கிடைக்க உள்ள எதிர்கால தவணைகளை உறுதி செய்ய ஒரு முக்கிய மான செயல்முறையை முடிக்க வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. மத்திய அரசு எதிர்காலத்தில் அளிக்கும் தவணை முறை நிதியை பெற விவசாயிகள் eKYC செயல்முறையை (eKYC process) முடிக்க வேண்டியது கட்டாயம் என்று உத்தர விடப்பட்டு உள்ளது.

PM-KISAN திட்டத்தின் கீழ் e-KYC செயல்முறையை முடிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை பார்க்கலாம்.

PM-Kisan–ன் அதிகாரப்பூர்வ வெப்சைட்டான pmkisan.gov.in என்ற வெப்சைட்டிற்கு சென்று login செய்ய வேண்டும். பின் ஹோம்பேஜில் தோன்றும் 'e-KYC' ஆப்னை கிளிக் செய்து கொள்ள வேண்டும். இப்போது ஆதார் e-kyc–ஐ எளிதாக்கும் ஒரு புதிய பேஜ் ஓபன் ஆகும். அதில் ஆதார் கார்டு நம்பர், கேப்ட்சா கோட் ஆகியவற்றை என்டர் செய்து search–ஐ கிளிக் செய்ய வேண்டும். பின் ஆதார் கார்டுடன் இணைக்கப்பட்ட மொபைல் நம்பரை என்டர் செய்யுமாறு கேட்கப்படும். மொபைல் நம்பரை என்டர் செய்த பிறகு, 'Get OTP' என்பதை கிளிக் செய்ய வேண்டும். பின் குறிப்பிட்ட பாக்ஸில் மொபைல் நம்பருக்கு வந்துள்ள OTP–ஐ என்டர் செய்ய வேண்டும்.

இறுதியாக PM-Kisan e-KYC வெற்றிகரமாக சப்மிட் ஆனதா என்பதை சரிபார்த்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்கள் தேவைப்பட்டால் அதிகாரப்பூர்வ வெப்சைட்டான pmkisan.gov.in–ல் சென்று பார்த்து கொள்ளலாம்.

எனவே இலால்குடி வட்டாரத்தில் பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி - திட்டத்தில் பதிவு செய்துள்ள அனைத்து பயனாளிகளும் விரைவில் செய்து பயன்பெற இலால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுகுமார் தெரிவிக்கிறார்.

# தொடக்கப் பள்ளியில் சுதந்திர தின விழா

கடலூர், ஆக.16

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஆண்டு பயிலும் B1 குழுவை சேர்ந்த மாணவர்கள் 16 பேர், பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் முனைவர் வீ.பாலகிருஷ்ணன் வழிகாட்டுதலின், குமராட்சி அடுத் நாஞ்சலூர் கிராமத்தில் 3 மாதங்கள் தங்கி பயிற்சி பெறுகின்றனர்.

அதன்படி தொடக்கப்பள்ளியில் பேராசிரியர் சேகர் தலைமையில் சுதந்திர தின விழா நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் சுதந்திர போராட்ட வீரர்களை பற்றி மாணவர்கள் சிறப்புரை ஆற்றினர். மேலும் மாடி தோட்டத்தின் சிறப்பினை கூறி பள்ளி மாணவர்களுக்கு காய்கறி விதைகளை வழங்கினர்.

**தலைக்கவசம் உயிர்க்கவசம்**


MICRONOL®
அனைத்துப் பயிர்களில் அதிக மகசூல் பெற
போரானால்
(போரான் (B) - 20%)
MICRONOL
BORONOL
BORON (B) - 20%
FULLY SOLUBLE MICRONUTRIENT
FOLIAR FERTILIZER
For Agricultural use only
ISO 9001 : 2015
தெளியுங்கள்
LINGA CHEMICALS
Customer Care: 0452 - 2321722